பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
24 08-2025 SUNDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. ககன்யான் திட்டத்தின் ஒருபகுதியாக, ஒருங்கிணைந்த பாராசூட் இறக்க சோதனை இன்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரோ கூறியுள்ளது.

2. நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டியதன் அவசியத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

3. பள்ளிக்கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடல் பகுதியில் அடுத்த 48 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள்-

<<<<<>>>>>

ககன்யான் திட்டத்தின் ஒருபகுதியாக, ஒருங்கிணைந்த பாராசூட் இறக்க சோதனை இன்று வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக இஸ்ரோ கூறியுள்ளது.

விமானப்படை, கடற்படை, கடலோர காவல்படை மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்துடன் இணைந்து இந்த சோதனை நடத்தப்பட்டதாக இஸ்ரோவின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விண்கலத்தில் இருந்து பாதுகாப்பாக வீரர்களை பூமியில் இறக்குவதற்கு இந்த சோதனை உதவிடும் என்று இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி

மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – த வி வெங்கடேஷ்வரன் 75 Sec. )*

<<<<<<>>>>>>

நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளில் ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டியதன் அவசியத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சட்டப்பேரவை தலைவர்களின் மாநாட்டினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

அரசியல் ஆதாயத்திற்காக எதிர்க்கட்சிகள் அவை நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்படுவது ஏற்புடையது அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

இதுபோன்ற செயல்பாடுகள் காரணமாக, அவை நடவடிக்கைகள் முழுமையாக நடைபெறாமல் போவதாக அவர் குறிப்பிட்டார்.

இது நாட்டின் வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>>

பள்ளிக்கல்வித்துறையின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

இல்லம் தேடி கல்வித்திட்டம் 660 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஒரு கோடி பேர் பயனடைந்திருப்பதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் வெளிநாட்டு கல்வி சுற்றுலா திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பள்ளி ஆசிரியர்களுக்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை முழு உடல் பரிசோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

தெருநாய் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண, தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு ஏ என் எஸ் பிரசாத், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இக்கோரிக்கையை வலியுறுத்தியுள்ளார்.

தெருநாய் பிரச்சினை காரணமாக பொதுமக்களிடையே அச்ச உணர்வு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் இடம்பெற்றுள்ள நெறிமுறைகளையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக உயர்நிலை குழுகூட்டத்திற்கு முதலமைச்சர் அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

அரசு மருத்துவமனைகளில் நாய்க்கடிக்கான மருந்துகள் போதிய அளவில் கையிருப்பில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு ஏ என் எஸ் பிரசாத் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

தூய்மைப் பணியாளர்கள் விவகாரத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி ஒரே நிலைப்பாட்டைதான் கொண்டிருப்பதாக அக்கட்சியின் தலைவர் திரு தொல் திருமாவளவன் கூறியுள்ளார்.

*இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூய்மைப்பணியாளர்களை தனியார் வசம் ஒப்படைக்கக்கூடாது என்று கூறினார்.*

*இந்த தொழிலை ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கான நிரந்தர பணியாக ஒதுக்கிவிடக்கூடாது என்பதற்காகத்தான் மாற்றுக்கருத்தை வெளியிட்டுள்ளதாக திரு தொல் திருமாவளவன் தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>*

*வங்கக்கடல் பகுதியில் அடுத்த 48 மணிநேரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.*

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் (1) – 34 Sec. )*

*கடற்பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.*

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் (2) – 41 Sec. )*

*<<<<<<>>>>>*

*சேலம் பூம்புகார் விற்பனை நிலையத்தில் கணபதி தரிசனம் என்ற சிறப்பு கண்காட்சி நடைபெற்று வருகிறது.*

*விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடத்தப்படும் இந்த கண்காட்சியில், பல்வேறு வடிவங்களில் விநாயகர் சிலைகள் விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அதன் மேலாளர் திரு நரேந்திர போஸ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(Sound Byte – நரேந்திர போஸ் - 39 Sec. )*

*<<<<<<>>>>>*

*மாவட்டச் செய்திகள்*

*புதுக்கோட்டை மாவட்டம் கீரணிப்பட்டி கிராமத்தில் விவசாயிகளுக்கான சிறப்பு திட்ட முகாம் இன்று நடைபெற்றது.*

-------------

*வேலூரில் கம்பர் திருவிழா இன்று நடைபெற்றது.*

-------------

*மயிலாடுதுறையில் வெறிநாய் கடித்ததில் 20-க்கும் மேற்பட்டோர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.*

------------

*திருப்பத்தூர் மாவட்டம் ஏலகிரியில் நண்பர்கள் குளிப்பதை வேடிக்கை பார்க்க சென்ற பள்ளி மாணவன் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தான்.*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா மூன்று தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.*

*கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் சீனியர் ஆடவர் 50 மீட்டர் பிரிவில் Aishwary Pratap Singh Tomar தங்கப்பதக்கம் வென்றார்.*

*ஜுனியர் ஆடவர் 50 மீட்டர் பிரிவில் Adriyan Karmarkar தங்கப்பதக்கம் வென்றார்.*

*இப்பிரிவில இந்தியாவின் Vedant Nitin வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*ஜுனியர் குழு பிரிவிலும் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.*

*ஆடவர் 50 மீட்டர் குழு பிரிவில் இந்தியாவிற்கு வெள்ளிப்பதக்கம் கிடைத்தது.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 26 தங்கம், 9 வெள்ளி, 11 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.*

-----------

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 8-0 என்ற கோல் கணக்கில் பூட்டானை வென்றது.*

*பூட்டானின் திம்புவில் நடைபெற்ற இப்போட்டியில் Anushka Kumari ஹாட்ரிக் கோல் அடித்து சாதனை படைத்தார்.*

*<<<<<<END>>>>>*